# வணக்கம்

ஏழு ஆண்டுகளாக விகடன், குமுதம், கல்கி என்று குடிமாறி வந்துகொண்டிருக்கும் 'ஓ' பக்கங்களின் எட்டாவது தொகுதி இது. முதல் இரு தொகுதிகளை விகடனும், மூன்றாவதை கிழக்கு பதிப்பகமும் நான்காவதை குமுதமும், அடுத்த நான்கையும் என்னுடைய ஞானபாநு பதிப்பகமும் வெளியிட்டுள்ளன.

இதை எழுதும் முன்பு எட்டு தொகுதிகளையும் புரட்டிப் பார்த்தேன். தொடர்ந்து இவற்றைப் படித்திருக்கக்கூடிய வாசகர்களில் சில விஷயங்களில், என் நிலைப்பாட்டுடன் மாறுபாடு கொண்டிருந்திருக்கக்கூடியவர்கள் உட்பட எல்லாருமே ஒரு சக மனிதனாக நம் சமூகம் பற்றிய என் தவிப்பை, கவலையை, அக்கறையை நிச்சயம் உணர்ந்திருப்பீர்கள். நம் இருவருக்கும் இருக்கும் இந்த அக்கறையின் பகிர்வுதான் என் எழுத்து. நம் தனி வாழ்விலும் பொது வாழ்விலும் தீர்வுகளை நோக்கி நம்மை நகர்த்திச் செல்ல இது உதவ வேண்டும் என்பது என் விருப்பம்.

என் எழுத்தைப் படிக்கும் உங்களில் இரு பிரிவினரை பல சந்தர்ப்பங்களில் நேரில் சந்திக்கவும் மற்றபடி உணரவும் முடிகிறது. ஒரு சாரார் எழுபதுகளிலிருந்து தொடர்ந்து என்னை வாசித்து வரும் மூத்த வாசகர்கள். அடுத்த முப்பது ஆண்டுகளில் நம்பிக்கை வறட்சி உங்களைச் சூழ்ந்தபோதும் உங்கள் நம்பிக்கையையும் எதிர்பார்ப்புகளையும் தூக்கிப் போட்டுவிட மனமில்லாமல் தொடர்ந்த தேடலில் இருக்கிறீர்கள். அந்தப் பயணத்தில் நம்பிக்கையுடன் பற்றிக் கொள்ள ஒரு விரலாக என் எழுத்தை நீங்கள் உணர்வதைப் பார்க்கிறேன். இன்னொரு சாரார் இந்தத் தலைமுறை இளம் வாசகர்கள். சுமார் 25லிருந்து 40க்குள் இருக்கும் நீங்கள், உங்கள் மீது முந்தைய தலைமுறையினருக்கு இருக்கும் கோபம், அவநம்பிக்கை, விரக்தி இவையெல்லாம் அர்த்தமற்றவை என்று நிரூபிக்கத் துடிக்கும் வாசகர்கள். புரிதலுடனும் அன்புடனும் முதுகில் விழும் தோழமைக் கையாக, என் எழுத்து உங்களை அணைப்பதை உங்களைச் சந்திக்கும்போதெல்லாம் உணர்கிறேன். இந்த இருவகை வாசகர்களான உங்களை இணைக்கும் பொதுப் புள்ளி இந்த சமூகத்தின் கசடுகளை நீக்கும் காலம் வந்தே தீரும் என்ற நம்பிக்கைதான். அந்த நம்பிக்கைச் செடியின் வேரை நனைக்கும் பல குடம் தண்ணீரில் ஒரு குவளை நீராக என் எழுத்தும் இருக்கவேண்டுமென்பதே என் நோக்கம்.

இந்தப் பகிர்தலில் என்னுடன் சக பயணிகளாக வரும் வாசகர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் என் நன்றி. ஓயுதல் செய்யோம். தலை சாயுதல் செய்யோம். உண்மைகள் சொல்வோம். பல வண்மைகள் செய்வோம்.

அன்புடன்

**ஞாநி**

சென்னை 78

2011 மார்கழியின் புயல் இரவில்